# உங்களுடைய நீச்சல் குளத்தைப் பாதுகாத்து உங்களுடைய குழந்தைகளைப் பாதுகாக்க, நீங்கள் உறுதிப்படுத்தவேண்டிய குறிப்புகள்

2010- 2011 ஆம் ஆண்டு காலப் பகுதியில், நி.ச.வே (NSW) மாநிலத்தில் ஐந்து வயதிற்கும் கீழ்ப்பட்ட 12 குழந்தைகள் நீரில் மூழ்கி இறந்துள்ளனர்,மேலும் 64 மற்ற குழந்தைகள் கிட்டத்தட்ட நீரில் மூழ்கிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அனைத்து வயதினரிலும் ஐந்து வயதிற்கும் கீழ்ப்பட்ட குழந்தைகளே நீரில் மூழ்கி இறப்பவர்களில் அதிக வீதத்தினராக உள்ளனர், மற்றும் இறக்கும் குழந்தைகளில் 50 சதவீதத்தினர் நீச்சல் குளங்களிலேயே இறக்கின்றனர்.

ஐந்திற்கும் குறைந்த வயதுடைய குழந்தைகளின் நீச்சல்குள இறப்பு வீதத்திற்கு நீச்சல்குளங்களுக்குப் போதுமான அளவில் பாதுகாப்பு வேலிகள் போடாததே தொடரும் முக்கியக் காரணமாக இருக்கிறது. நீச்சல் குளங்களைச் சுற்றி வேலி போடுவது நீச்சல்குளப் பகுதிகளைக் குழந்தைகள் எளிதில் சென்றடைவதை மட்டுப்படுத்துவது **மட்டுமன்றி** கூடுதல் பாதுகாப்பினை அளிக்கிறது.

வருடம் முழுவதும், குறிப்பாகக் கோடைக்காலத்தில், நீச்சல்குள உரிமையாளர்கள் தமது குளங்களைத் தொடர்ந்து கண்காணித்துச் சோதித்து வருதல் வேண்டும்.

நீச்சல் குளங்களுக்கு வேலி போடுவது குறித்த சட்டங்கள் ஒவ்வொரு மாநிலத்திலும், பிரதேசத்திலும் வெவ்வேறாக இருக்கும் என்பதையும், இங்கு காணப்படும் உறுதிப்படுத்தப்பட வேண்டிய செய்திகள் நி.ச.வே மாநிலத்திற்கு மட்டுமே பொருந்தும் என்பதையும் தயவு செய்து கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

1992 ஆம் ஆண்டின் நி.ச.வே (NSW) நீச்சல்குளச் சட்டத்தை மேற்கொள்ளாத எவருக்கும் கடுமையான அபராதம் விதிக்கப்படும்.



மேல் அதிகத் தகவல்களுக்கு http://kidshealth.schn.health.nsw.gov.au எனும் வலைத்தளப் பக்கத்தில் 'செயல்முறைத்திட்டங்கள் தாவல்' (Projects tab) எனும் பகுதிக்குச் சென்று நீரில் மூழ்குவதைத் தடுப்பது குறித்த பகுதியில் 'சொடுக்கிப்'(click) பாருங்கள்.

kids health
the children's hospital at Westmead
Child Health Promotion Unit

ctcper
the children's hospital at Westmead
The Centre for Trauma Care, Prevention, Education and Research

NSW GOVERNMENT

Samuel Morris FOUNDATION

நவம்பர் 2012

SPASA
SWIMMING POOL & SPA ASSOCIATION OF NSW LIMITED

## நீச்சல்குளம் குறித்த சட்டங்களும் உங்களது சூழ்நிலைகளும்

மக்கள் குடியிருக்கும் எந்தவொரு கட்டிடத்திலிருந்தும், வீட்டை ஒட்டியிருக்கும் பொது அல்லது தனிப்பட்டவர்களது வீட்டிலிருந்தும் நீச்சல் குளத்தைத் தனியாகப் பிரிக்கும் வகையில் தமது நீச்சல் குளங்களைச் சுற்றி எல்லாப் பக்கங்களிலும் குழந்தைகளால் கடந்து செல்ல இயலாத வகையில் தடுப்புவேலி போடப்பட்டிருக்க வேண்டுமென 'நி.ச.வே (NSW) மாநில நீச்சல்குளச்சட்டம் 1992' தனிப்பட்ட முறையில் நீச்சல் குளங்கள் வைத்திருக்கும் அனைத்து உரிமையாளர்களையும் வேண்டுகிறது.

பொதுவாக, நீச்சல்குளத்தின் நான்கு பக்கங்களையும் அடைக்கும் வகையில் குறிப்பிட்ட தரங்களுக்கேற்பப் போடப்படும் தடுப்புவேலியானது இச் சட்டத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ள தடுப்பாக அமையும்.

இருப்பினும், நீச்சல்குளம் எப்போது கட்டப்பட்டது என்பதைப் பொறுத்தும், நீச்சல்குளம் அமைந்துள்ள இடம் எப்படிப்பட்டது என்பதைப் பொறுத்தும் வெவ்வேறு தர நிர்ணயங்களும் விதிவிலக்குகளும் செல்லுபடியாகும். உதாரணமாக, மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில், வீட்டை நீச்சல்குளத்திலிருந்து தனிமைப்படுத்தி வைப்பதற்காகக் குழந்தைகளால் திறக்கவியலாத கதவுகள் மற்றும் சன்னல்களில் பூட்டுகளைப் பயன்படுத்த இந்தத் தர நிர்ணயங்களும் விதிவிலக்குகளும் அனுமதிக்கக்கூடும்.

உங்கள் நீச்சல்குளத்திற்கு எப்படிப்பட்ட தடுப்புவேலி தேவைப்படும், மற்றும் எந்தத் தர நிர்ணயங்களுக்கேற்ப அவை அமைக்கப்படவேண்டும் என்பது குறித்த அறிவுறுத்தல்களைப் பெற உங்களது உள்ளூர் நகரவையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## நீச்சல்குளப் பதிவேடு

29 அக்டோபர் 2013 அன்று 'மாநிலம் தழுவிய நீச்சல்குளப் பதிவேட்டில்' (state-wide swimming pool register) அனைத்து நீச்சல்குளங்களும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும். 29 ஏப்ரல் 2013-லிருந்து இந்த 'நீச்சல்குளப் பதிவேடு' உங்களுக்குக் கிடைக்கும். பதிவு செய்யப்படும் செயல்முறையின் ஒரு பகுதியாக, தமது அறிவிற்கு எட்டிய வரை தமது நீச்சல்குளத் தடுப்புவேலி விதிமுறைகளுக்கேற்ப அமைந்துள்ளது என்று நீச்சல்குள உரிமையாளர்கள் சான்றளிக்கவேண்டும். தமது நீச்சல்குளங்களைப் பதியாதவர்களுக்கு அபராதங்கள் விதிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 29 ஏப்ரல் 2013 –க்குப் பிறகு – 'மாநிலம் தழுவிய நீச்சல்குளப் பதிவேட்'டில் உங்களது நீச்சல்குளத்தைப் பதிவுசெய்து விட்டீர்களா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – உங்களது உள்ளூர் நகரவையுடனோ அல்லது தனியார் ரீதியில் சான்றளிக்கும் ஒருவருடனோ தொடர்பு கொள்ளுங்கள், அல்லது உங்கள் நீச்சல்குளத்தைப் பதிவு செய்துகொள்ள நி.ச.வே மாநில அரசின் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள். |

## நீச்சல்குளச் சோதனைப் பார்வையிடல்கள்

29 ஏப்ரல் 2014 அன்று, இரண்டு குடியிருப்புகளுக்கும் மேல் உள்ள அனைத்து சுற்றுப்பயணியர் மற்றும் வருநர்களுக்கான தங்குமிட வசதிகள் உள்ள இடங்களில் குறைந்தபட்சமாக மூன்று வருடங்களுக்கு ஒரு முறை நீச்சல்குளச் சோதனைப் பார்வையிடல்கள் செய்யப்படவேண்டியது கட்டாயமாகும்.
ஆட்கள் தங்கியிருக்கும் அல்லது பயன்படுத்தப்படும் அல்லது ஆட்கள் தங்குவதற்கும், பயன்படுத்துவதற்கும் ஏற்ற வகையிலும் அல்லது தனிக் குடியிருப்பாகப் பயன்படுத்தப்படும் வகையிலும் கட்டப்பட்டுள்ள அல்லது மாற்றியமைக்கப்பட்டுள்ள அறை அல்லது 'அறைத் தொகுப்பு' (suite of rooms) 'குடியிருப்பு' என்று அழைக்கப்படும். 'நகர்ப்புற இல்லங்கள்' (town houses)/ 'வில்லா' என்று அழைக்கப்படும் குடில்கள், தங்குமிட அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 'தடுப்புக் குடியிருப்புகள்' ஆகியன இதில் உள்ளடங்கும். மற்றும் பல வீடுகள் உள்ள குடியிருப்புகள், சமூகக்கூடங்களைக் கொண்டுள்ள குடியிருப்புகள், நடமாடும் வீடுகளைக் கொண்டுள்ள ஊர்தி பூங்காக்கள் (Caravan Parks), முகாம் இட்டுத் தங்கும் மைதானங்கள் போன்ற இடங்களிலுள்ள பொது நீச்சல்குளங்கள் ஆகியன இதிலடங்கும்.

அனைத்து உள்ளூர் நகரவைகளுக்குமான நீச்சல்குளச் சோதனைப் பார்வையிடல் திட்டங்கள் 29 அக்டோபர் 2013-க்கும் முன்பாகவே துவங்கிவிடும். முதல் பார்வையிடலுக்கு $150 வரைக்குமான கட்டணத்தையும், இரண்டாவது பார்வையிடல் தேவைப்படும்போது (முதல் பார்வையிடலின்போது குறைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால்) அதற்காக $100 வரைக்குமான கட்டணங்களையும் நகரவைகள் நீச்சல்குள உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு உங்களது உள்ளூர் நகரவையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் தேதிக்குள் நீச்சல்குளத் தடுப்புவேலி குறித்த அனைத்து விதிமுறைகளும் பின்பற்றப்பட்டுள்ளன என்று கூறும் செல்லுபடியாகக்கூடிய சான்று ஒன்றை நீச்சல்குளம் உள்ள அனைத்துச் சொத்துக்களும் பெற்றால்தான் அந்தச் சொத்துக்களை விற்கவோ அல்லது வாடகைக்கு விடவோ இயலும்.


1 மே 2012-லிருந்து, நீச்சல்குளத் தடுப்புவேலிகளைப் பார்வையிட்டு சோதித்துச் சான்றளிப்பதற்கெனத் தமது உள்ளூர் நகரவையையோ அல்லது அங்கீகாரம் பெற்ற சான்றளிப்பவர் ஒருவரையோ நீச்சல்குள உரிமையாளர்கள் அமர்த்திக் கொள்ளலாம். விதிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன என்று கூறும் சான்றுகள் மூன்று ஆண்டு காலத்திற்குச் செல்லுபடியாகும்.

## நீச்சல்குள உட்பக்கத் தடுப்புவேலி – உயரம் - நீச்சல்குள எல்லைக் கோட்டில் போடப்படும் தடுப்புவேலி குறித்து

| | | |
|---|---|---|
| நீச்சல்குளம் கட்டி எல்லா வேலைகளும் முடிந்த பிறகு, தரைமட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 1.2 மீட்டர் உயரத்திற்கு உங்களது தடுப்புவேலி இருக்கிறதா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் கட்டுமானத் தொழிலர் ஒருவரையோ, நீச்சல்குளத் தொழில்நுட்பர் ஒருவரையோ அல்லது தடுப்புவேலி அமைத்துத் தரும் ஒப்பந்ததாரர் ஒருவரையோ நேராகச் சென்று பாருங்கள். |

## நீச்சல்குளத் தடுப்புவேலி – 'மேலே ஏற இயலாத பகுதி'

| | | |
|---|---|---|
| மரங்கள், புதர்ச்செடிகள், அல்லது திறந்தவெளி அடுப்பு (BBQ) போன்ற பொருட்கள், தொட்டிச்செடிகள், பொம்மைகள், ஏணிகள், மற்றும் நாற்காலிகள் போன்ற வேறு எந்தப் பொருட்களும் 90 சென்டி மீட்டர் அளவுள்ள 'ஏற இயலாத பகுதி'(Non Climbable Zone)-க்கு வெளிப்பக்கமாக இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்திவிட்டீர்களா? *(தடுப்புவேலியின் வெளிப்புற மேல்முனையிலிருந்து வில் வடிவக் கோடு ஒன்று தரையை நோக்கி வளைந்து சென்று தொடுவது போல் இந்தத் தூரம் அளக்கப்படும்.)* | ☐ **ஆம்** | ☐ **இல்லை** - மரங்கள் அல்லது புதர்ச்செடிகள், அல்லது திறந்தவெளி அடுப்பு (BBQ) போன்ற பொருட்கள், தொட்டிச்செடிகள், பொம்மைகள், ஏணிகள், மற்றும் நாற்காலிகள் போன்ற பொருட்களைத் தடுப்புவேலியின் மேல் ஏறுவதற்காகக் குழந்தைகள் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக இப் பொருட்கள் 90 சென்டி மீட்டர் அளவுள்ள 'ஏற இயலாத பகுதி'(Non Climbable Zone)-க்கு உட்புறமாக இருக்கக்கூடாது. |
| நீச்சல்குளத் தடுப்புவேலியின் உட்புறமாக உள்ள 30 சென்டி மீட்டர் அளவுள்ள 'ஏற இயலாத பகுதி'யில் நிரந்தரக் கட்டுமானங்கள் எதுவும் இருக்கக்கூடாது என்பது கட்டாயமாகும். நீச்சல்குளப் பகுதியில் நிழற்பந்தல்கள், வாகனக்கூடம் (garage), துணி உலர்த்துக் கம்பிகள், படகுத் தரிப்பிடங்கள், சரிவிறக்கப்பாதை (ramp), தோணிப்பாலம் (pontoons) அல்லது கொட்டகைகள் போன்ற எதுவும் அனுமதிக்கப்படுவதில்லை. | | |






## நீச்சல்குளத் தடுப்புவேலி – கீழிருந்து மேல் செல்லும் கம்பிகளுக்கு இடையே உள்ள இடைவெளி


| | | |
|---|---|---|
| மேல் செல்லும் கம்பிகள் இருந்தால், கம்பிகளுக்கு இடையேயுள்ள இடைவெளியானது 10 சென்டி மீட்டருக்கும் குறைவாக உள்ளதா?<br><br>*குறிப்பு: 10 சென்டி மீட்டர் இடைவெளி என்பது கம்பியின் தடிப்பையும் சேர்த்ததாகும், பொதுவாக இடைவெளி 9 சென்டி மீட்டர் அளவில் இருக்கும்.* | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் கட்டுமானத் தொழிலர் ஒருவரையோ, நீச்சல்குளத் தொழில்நுட்பர் ஒருவரையோ அல்லது சுற்றிலும் தடுப்புவேலி அமைத்துத் தரும் ஒப்பந்ததாரர் ஒருவரையோ உடனே பாருங்கள். |

## நீச்சல்குளத் தடுப்புவேலி – மேலே ஏறுவதற்கு ஏற்ற வகையில் பக்கவாட்டில் குறுக்காக அமைந்துள்ள கம்பிகள்

| | | |
|---|---|---|
| பக்கவாட்டில் குறுக்காக அமைந்துள்ள கம்பிகள் ஒவ்வொன்றிற்கும் இடையே குறைந்தது 90 சென்டி மீட்டர் இடைவெளி இருக்கிறதா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் கட்டுமானத் தொழிலர் ஒருவரையோ, நீச்சல்குளத் தொழில்நுட்பர் ஒருவரையோ அல்லது சுற்றிலும் தடுப்புவேலி அமைத்துத் தரும் ஒப்பந்ததாரர் ஒருவரையோ உடனே பாருங்கள். |

## நீச்சல்குளத் தடுப்புவேலிக்கும்– தடுப்புவேலியின் கீழ்ப்புறத்திற்கும் உள்ள இடைவெளி

| | | |
|---|---|---|
| கட்டுமானப் பணி முடிவுற்ற தரையிலிருந்து தடுப்புவேலியின் அடிப் பக்கம் வரைக்கும் உள்ள இடைவெளி 10 சென்டி மீட்டருக்கும் அதிகம் இல்லாமல் இருக்கிறதா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் கட்டுமானத் தொழிலர் ஒருவரையோ, நீச்சல்குளத் தொழில்நுட்பர் ஒருவரையோ அல்லது சுற்றிலும் தடுப்புவேலி அமைத்துத் தரும் ஒப்பந்ததாரர் ஒருவரையோ உடனே பாருங்கள். |









## நீச்சல்குளத் தடுப்புவேலி மற்றும் நுழைவாயில் - இவற்றைப் பராமரித்தல்

| | | |
|---|---|---|
| தடுப்புவேலியில் பொருத்தப்பட்டிருக்கும் நட்டுகள், திருகாணிகள் மற்றும் இதர ‘பொருத்திகள்’ (fasteners) ஆகியன இறுக்கமாகவும், நல்ல நிலையிலும் இருக்கின்றனவா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – கழன்று இறுக்கமற்ற நிலையிலுள்ள நட்டுகள், திருகாணிகள் மற்றும் பொருத்திகளை இறுக்குங்கள் அல்லது மாற்றுங்கள். |
| வழவழப்பூட்டும் எண்ணை அல்லது சிலிகோன் எண்ணையைத் தானாகவே மூடிக்கொள்ளும் நீச்சல்குள நுழைவாயில் கதவுகளில் உள்ள இணைப்புத் திருகுகளின் மீது தெளிக்கிறீர்களா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – நீச்சல்குளத் தடுப்புவேலி மற்றும் நுழைவாயில் கதவுகளைச் செய்பவர்கள் தடுப்புவேலியையும், நுழைவுக் கதவையும் எப்படிப் பராமரிப்பது என்பது குறித்த எழுத்துவடிவிலான அறிவுறுத்தல்களை உங்களுக்குத் தர வேண்டும். சுருள்கம்பிகளை(springs) அவ்வப்போது மாற்றுவதும், வழவழப்பூட்டும் எண்ணை அல்லது சிலிகோன் எண்ணையைத் தானாகவே மூடிக்கொள்ளும் நீச்சல்குள வாயில் கதவுகளில் உள்ள இணைப்புத் திருகுகளின் மீது தெளிப்பதும் இந்த அறிவுறுத்தல்களில் உள்ளடங்கலாம். இப்படிச் செய்வதால் தானாகவே மூடி, பூட்டிக்கொள்ளும் வாயில் கதவுகளில் ஏற்படும் குறைபாடுகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். |

## நீச்சல்குளத் தடுப்புவேலி – நுழைவாயில் தாழ் பொருத்தப்பட வேண்டிய இடம்

| | | |
|---|---|---|
| உங்களது நீச்சல்குளத்தின் நுழைவாயில் கதவில் பொருத்தப்பட்டுள்ள ‘மூடப்படாத தாழ் சாதனம்’ (non shielded latching device) தரை மட்டத்திலிருந்து குறைந்தபட்சம் 150 சென்டி மீட்டர் உயரத்தில் இருக்கிறதா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – உங்களுடைய தாழ் தரைமட்டத்திலிருந்து 150 சென்டி மீட்டர் உயரத்திற்கும் குறைவாக இருந்தால், அது நீச்சல்குளத் தடுப்புவேலியின் உட்புறமாக, தடுப்புவேலியின் மேல்பக்கத்திலிருந்து குறைந்தபட்சம் 15 சென்டி மீட்டருக்கும் கீழாகவும், தாழைச் சுற்றிக் குறைந்தபட்சம் 45 சென்டி மீட்டர் ஆர அளவிற்குப் போடப்பட்டுள்ள ஒரு மூடியுடனும் அமைந்திருக்க வேண்டியது கட்டாயமாகும். |

## மீள் சுவாச முதலுதவி குறித்த அறிவிப்புப் பலகை (Cardio Pulmonary Resuscitation (CPR)

| | | |
|---|---|---|
| நல்ல நிலையிலும், மூன்று மீட்டர் தூரத்திலிருந்து வாசிக்க இயலுமான வகையிலும் அமைக்கப்பட்டுள்ள மீள் சுவாச முதலுதவி குறித்த அறிவிப்புப் பலகை (CPR ) உங்களுடைய நீச்சல்குளத்தில் இருக்கிறதா?<br><br>*குறிப்பு: CPR அறிவிப்புப் பலகை மங்கிப் போனால், அவ்வப்போது அதை மாற்றவேண்டிய தேவை ஏற்படும்.* | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – நீச்சல்குளத்திற்குத் தேவையான பொருட்கள் கிடைக்கும் கடையிலிருந்தோ, உங்களது உள்ளுர் நகரவையிலிருந்தோ அல்லது செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ்’ , அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம் அல்லது ‘ராயல் லை.்.ப் சேவிங் சொஸைட்டி’- போன்ற சமூக அமைப்பினரிடமிருந்தோ மீள் சுவாச முதலுதவி குறித்த அறிவிப்புப் பலகை (CPR) ஒன்றை வாங்கி அதைப் பொருத்துங்கள். |

## சுத்திகரிப்புப் பெட்டிகள் (Skimmer boxes)

நீச்சல் தொட்டியில் உள்ள **சுத்திகரிப்புப்** பெட்டி (Skimmer box) யின் மீது, குறிப்பாகப் பழைய **சாதாரண**(potty) வசதியுள்ள **சுத்திகரிப்புப்** பெட்டி (Skimmer box) யின் மீது, உட்காருவதால் பலத்த உள்காயங்கள் ஏற்படும் என்பதனால் 1993-ஆம் ஆண்டிலிருந்து நி.ச.வே (NSW) மாநிலத்தில் உள்ள அனைத்து நீச்சல்குளங்களிலும், நீச்சல் தொட்டிகளிலும், '**குமிழிக் குளியல் தொட்டி**' (spa) எனப்படும் நீச்சல்தொட்டிகளிலும் பாதுகாப்பான **சுத்திகரிப்புப்** பெட்டி (Skimmer box) கள் இருக்கவேண்டியது அவசியமாகும்.

| | | |
|---|---|---|
| உங்கள் **சுத்திகரிப்புப்** பெட்டி (Skimmer box) யில் அரைக்கோள வடிவமுள்ள பாதுகாப்பு மூடியும், கருவி ஒன்றினால் மட்டும் கழற்ற இயலுமான பாதுகாப்பு வலையும் உள்ளனவா? | ☐ **ஆம்** | **இல்லை** - 'உள்வாங்குப் பகுதி வடிகட்டி'(incoming filter)யைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக நிரந்தரமான பாதுகாப்பு மூடி ஒன்றைப் பொருத்துங்கள். இப்படிப்பட்ட சரிபார்ப்பு வேலைகளை 'நார்க்கண்ணாடிப் (fibreglass) பொருட்களை உற்பத்தி செய்பவர்கள் அல்லது சரிபார்ப்பவர்களால் இந்த வேலைகளைச் செய்ய இயலும் (இவர்களைப் பற்றிய விபரங்களை மஞ்சள் பக்கத் தொலைபேசிப் புத்தகங்களில் காணலாம்). உங்களது உள்ளூர் நீச்சல்குள சரிபார்ப்பாளரால் பழைய **சுத்திகரிப்புப்** பெட்டிகளை மாற்றி புதிய **சுத்திகரிப்புப்** பெட்டிகளை பொருத்தும் மலிவான சேவைகளை வழங்க இயலக்கூடும். |



**ஆபத்தான சுத்திகரிப்புப் பெட்டி** (skimmer box)



**பாதுகாப்பான திருத்தி அமைக்கப்பட்ட சுத்திகரிப்புப் பெட்டி** (skimmer box)

## புதிய நீச்சல்குளங்கள்

நிலத் தோண்டல் வேலைகளால் ஏற்படும் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட ஆபத்துக்கூறுகளைத் தவிர்ப்பதற்கெனப் புதிதாகக் கட்டப்பட்டுவரும் அனைத்து நீச்சல்குளங்களுக்கும் தற்காலிகத் தடுப்புவேலி போடப்படவேண்டும் என்று '*பணியிட உடல்நலம் மற்றும் பாதுகாப்புச் சட்டம் 2011*' (*Work Health and Safety Regulations 2011 (Cth)*) வேண்டுகிறது. காலியாக இருக்கும் நீச்சல்குளத்தில் குழந்தைகள் விழுவதைத் தடுப்பதையும், மழைக்குப் பிறகு நீச்சல்குளத்தில் தண்ணீர் நிரம்பியிருக்கும்போது குழந்தைகள் அதில் விழுவதைத் தடுப்பதையும் இது உள்ளடக்கும்.

| | | |
|---|---|---|
| நீச்சல்குளம் கட்டப்பட்டுவரும் வேளையில் அதைச் சுற்றிலும் தற்காலிகத் தடுப்புவேலி போட்டிருக்கிறீர்களா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – தற்காலிகத் தடுப்புவேலி ஒன்றை அமையுங்கள் |
| நீச்சல்குளத்தைக் கட்டுவதற்கு முன்பாக உங்களது உள்ளூர் நகரவையிடமிருந்து அங்கீகாரம் பெற்றிருக்கிறீர்களா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – உங்களது உள்ளூர் நகரவையுடனோ அல்லது தனியார் கட்டிட சான்றளிப்பாளர் ஒருவருடனோ தொடர்பு கொள்ளுங்கள் |
| நீங்கள் அமைக்கும் நிரந்தரத் தடுப்புவேலி அமைக்கப்படப் போகும் இடம் எது என்பது குறித்து உங்களது நகரவையுடன் பேசிவிட்டீர்களா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – நீங்கள் அமைக்கப்போகும் தடுப்புவேலியானது நகரவையின் விதிமுறைகள் சொல்லும் இடத்தில்தான் இருக்கும் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள உங்களது உள்ளூர் நகரவையுடன் தொடர்புகொள்ளுங்கள். |
| விதிமுறைகளைப் பின்பற்றி நீங்கள் நிரந்தரத் தடுப்புவேலி ஒன்றைப் போட்ட பிறகு கூடிய விரைவில் உங்களது உள்ளூர் நகரவையாலோ அல்லது தனியார் கட்டிடச் சான்றளிப்பாளர் ஒருவராலோ இறுதி சோதனைப் பார்வையிடல் ஒன்றை மேற்கொண்டுவிட்டீர்களா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** - இறுதி சோதனைப் பார்வையிடல் ஒன்றை மேற்கொள்ளும் பொருட்டு உங்களது உள்ளூர் நகரவையுடனோ அல்லது தனியார் கட்டிடச் சான்றளிப்பாளர் ஒருவருடனோ தொடர்பு கொள்ளுங்கள் |

| குமிழிக் குளியல்தொட்டி (spa) | | |
|---|---|---|
| உங்களது குமிழிக் குளியல்தொட்டியைச் (spa) சுற்றிலும் தடுப்புவேலி போடப்பட்டுள்ளதா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** - குழந்தைகளால் உள்ளே போக இயலாத தடுப்புவேலி ஒன்றை அமையுங்கள் அல்லது குழந்தைகளால் திறக்கப்பட இயலாத பூட்டு பொருத்தப்பட்டுள்ள கதவு, மூடி அல்லது கம்பிவலை ஒன்றினால் குமிழிக் குளியல்தொட்டி (spa) யானது பயன்படுத்தப்படாமல் இருக்கும்பொழுது மூடி பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யுங்கள். |
| **மேலும் சோதிக்கப்பட வேண்டியவை (other checks)** | | |
| அனைத்து மின் சாதனப் பாகங்களும், நீரேற்றிகளும் **(pumps)** மின்சாரப் பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன என்பதையும், அவை சரியான முறையில் மூடி வைக்கப்பட்டுள்ளன என்பதையும் சோதித்துப் பார்த்துவிட்டீர்களா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** - சட்டப்படி இருக்கவேண்டிய மின்சாதனப் பாதுகாப்பு அங்கீகரிப்பு இலக்கம் ஒன்று அல்லது விதிமுறைகள் பின்பற்றியுள்ளன என்பதைக் காட்டும் அடையாளம் ஒன்று உங்களது குமிழிக் குளியல்தொட்டி(spa) யின் மீது குறிக்கப்பட்டிருப்பதை உறுதி செய்யுங்கள். இக் குறியீட்டில் பொதுவாக அவுஸ்திரேலிய மாநிலம் அல்லது பிரதேசத்தைக் குறிக்கும் எழுத்து ஒன்றும் (உதாரணமாக NSW மாநிலத்தைக் குறிக்க ‘N’ என்ற எழுத்தும், சான்று இலக்கம் ஒன்றும் அடங்கியிருக்கும். |
| நல்ல நிலையிலும், 3 மீட்டர் தூரத்திலிருந்து வாசிக்க இயலுமான வகையிலும் உள்ள மீள் சுவாச முதலுதவி (CPR) குறித்த அறிவிப்புப்பலகை உங்களது குமிழிக் குளியல் தொட்டிக்கு அருகில் வைக்கப்பட்டுள்ளதா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – நீச்சல்குளத்திற்குத் தேவையான பொருட்கள் கிடைக்கும் உங்களது உள்ளூர் கடையிலிருந்தோ, அல்லது செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ்’, அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம் அல்லது ‘ராயல் லை∴ப் சேவிங் சொஸைட்டி’- போன்ற சமூக அமைப்பினரிடமிருந்தோ மீள் சுவாச முதலுதவி (CPR) குறித்த அறிவிப்புப் பலகை ஒன்றை வாங்கி அதைப் பொருத்துங்கள். |





## வாடகைதாரர்கள்

வாடகை ஒப்பந்தப் பத்திரம் ஒன்றில் நீச்சல்குளப் பராமரிப்பு குறித்த அனைத்துப் பொறுப்புகளும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். தேவைப்படும் எந்த ஒரு சேதாரம் குறித்தும், தேவைப்படும் சரிபார்ப்பு வேலைகள் குறித்தும் வீட்டு உரிமையாளருக்கு வாடகைதாரர் அறிவிக்க வேண்டியது கட்டாயமாகும். வீட்டு உரிமையாளருடனோ அல்லது முகவருடனோ தொடர்புகொள்ள இயலவில்லையென்றாலோ அல்லது தேவையான காலத்திற்குள் சரிபார்ப்பு வேலைகளை அவர்கள் மேற்கொள்ளவில்லை என்றாலோ, வீட்டிற்குப் பாதுகாப்பற்ற நிலையை ஏற்படுத்தும் அவசரமான குறைபாடுகள் குறித்த சரிபார்ப்பு வேலைகளை (நீச்சல்குளத் தடுப்புவேலியில் உள்ள குறைகள் உள்ளடங்க) வாடகைதாரரே மேற்கொள்ளவேண்டும்.

## நீச்சல்குள நுழைவாயில் கதவுகள், மற்றும் தானியங்கி மூடு தாழ்கள்

| | | |
|---|---|---|
| உங்களுடைய நீச்சல்குள நுழைவாயில் கதவு வெளிப்பக்கமாகத் திறக்கும் வகையில் (நீச்சல்குளப் பகுதிக்கும் வெளிப்பக்கமாக) பொருத்தப்பட்டிருக்கிறதா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – நீச்சல்குள நுழைவாயில் கதவு வெளிப்பக்கமாகத் திறக்கும் வகையில் (நீச்சல்குளப் பகுதிக்கும் வெளிப்பக்கமாக) பொருத்தப்பட்டிருக்க வேண்டியது கட்டாயம். |
| உங்களுடைய நீச்சல்குள நுழைவாயில் கதவு திறந்த எந்த ஒரு நிலையிலிருக்கும்போதும் அதை அழுத்தி மூடத் தேவையில்லாமல் தானாகவே மூடிக்கொள்ளுமா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – கதவு தானாகவே மூடிக்கொள்ள உதவும் சாதனம் ஒன்று பொருத்தப்படும் வரைக்கும் நீச்சல்குள நுழைவாயில் கதவு நிரந்தரமாகப் பூட்டப்பட வேண்டியது கட்டாயமாகும். நீச்சல்குளத்திற்குத் தேவைப்படும் பொருட்கள் கிடைக்கும் பெரும்பாலான கடைகளிலிருந்தோ அல்லது இரும்புக் கடையிலிருந்தோ தானாகவே மூடித் தாழிட்டுக்கொள்ளும் சாதனங்களை வாங்கலாம், மேலும் இவற்றைப் பொருத்துவதும் ஓரளவு எளிதான வேலையாகும். |
| உங்களுடைய நீச்சல்குள நுழைவாயில் கதவு மூடும்பொழுது தானாகவே பூட்டிக் கொள்ளுமா? | ☐ **ஆம்** | |
| உங்களுடைய நீச்சல்குள நுழைவாயில் கதவை ஒரு போதும் முட்டுக் கொடுத்துத் திறந்து வைக்கக் கூடாது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்களா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை**– நுழைவாயில் கதவை எப்போதும் மூடி வைத்திருங்கள், அதை ஒரு போதும் முட்டுக் கொடுத்துத் திறந்து வைக்கக்கூடாது. |

## எல்லைக்கோட்டில் உள்ள வேலியை நீச்சல்குளத் தடுப்புவேலியின் ஒரு பகுதியாகப் பயன்படுத்துதல்

| | | |
|---|---|---|
| எல்லைக்கோட்டில் இருக்கும் தடுப்பின் உட்புறமாகக் கீழிருந்து மேல் செல்லும் கம்பிகள் இருந்தால், இவை 90 சென்டி மீட்டர் அளவுள்ள 'மேலே ஏறவியலாத பகுதி' (Non Climbable Zone) –க்கும் வெளிப்புறமாக அமைந்துள்ளனவா? *(நீச்சல்குளத் தடுப்புவேலியின் மேல் பகுதியின் உட்புறத்திலிருந்து தரையை நோக்கிச் செல்லும் வில் வடிவக் கோடு போல இது அளவிடப்படும்.)* | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – அனுமதிப் பத்திரம் வைத்திருக்கும் கட்டுமானப் பணியாளர் அல்லது நீச்சல்குளத் தொழில்நுட்பர் அல்லது தடுப்புவேலி அமைக்கும் ஒப்பந்ததாரர் ஒருவரை அணுகி விதிமுறைகளுக்கு உட்பட்ட தீர்வு ஒன்று வேண்டுமெனக் கேளுங்கள். |

## குழந்தைகளால் திறக்க இயலாத சன்னல்கள் தரையிலிருந்து 180 சென்டி மீட்டர் உயரத்திற்கும் குறைவாக அமைந்துள்ள சன்னலின் அடிப்பகுதிகள்

1 செப்டம்பர் 2008-க்கு முன்பாகக் கட்டப்பட்ட நீச்சல்குளங்களிலும், தடுப்புவேலிகளிலும் நீச்சல்குளத் தடுப்புவேலி மற்றும் தடுப்புகளின் ஒரு பகுதியாகக் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான சன்னல்கள் இருக்கக்கூடும். 'குழந்தைகளுக்குப் பாதுகாப்பான சன்னல்கள்' இருக்கவேண்டும் என்ற தேவைகளை உள்ளடக்கும் பழைய நீச்சல்குளங்களுக்கான தகுதித்தேவைகளானவை 'குழந்தைகளால் திறக்கவியலாத சன்னல்கள்' இருக்கவேண்டும் என்ற தேவையை உள்ளடக்கிய புதிய நீச்சல்குளங்களுக்கான தகுதித்தேவைகளில் இருந்து மாறுபட்டவையாகும். நீச்சல்குளத் தடுப்புவேலியின் ஒரு பகுதியாக அமைந்துள்ள சன்னல்கள் தக்க தரநிர்ணயங்களுக்கேற்பப் பராமரிக்கப்பட்டு வரவில்லை என்றால், தற்சமயம் நடப்பிலுள்ள 'குழந்தைகளால் திறக்கவியலாத சன்னல்களைப் பொருத்த வேண்டுமென நீங்கள் கேட்கலாம். தடுப்புவேலிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டாலோ அல்லது அவை மீண்டும் நிறுவப்பட்டாலோ 'குழந்தைகளால் திறக்கவியலாத சன்னல்களைப் பொருத்த வேண்டும் என்ற தற்சமய விதிமுறைக்குக் கட்டுப்படவேண்டுமென நீங்கள் கேட்கலாம். உங்களது உள்ளூர் நகரவையுடன் தொடர்பு கொண்டு இது குறித்த விபரங்களைப் பெறுங்கள்.

| | | |
|---|---|---|
| உங்களது நீச்சல்குளத் தடுப்புவேலியின் ஒரு பகுதியாக **'குழந்தைப்- பாதுகாப்பு சன்னல்கள்** இருந்தால், அவற்றில் பூட்டு சாதனம் ஒன்றோ அல்லது 10 சென்டி மீட்டருக்கும் அதிகமாக சன்னல்களைத் திறக்கவிடாத பாதுகாப்பு வலை ஒன்றோ பொருத்தப்பட்டுள்ளதா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** – **'குழந்தைப்- பாதுகாப்பு சன்னல்க'**ளைப் பொருத்த இப்போது அனுமதிக்கப்படுவதில்லை. தற்சமயம் நடப்பிலுள்ள 'குழந்தைகளால் திறக்கவியலாத சன்னல்கள்' இருக்கவேண்டும் என்ற விதிமுறைத் தேவையை நீங்கள் பூர்த்தி செய்யவேண்டும். |
| உங்களது நீச்சல்குளத் தடுப்புவேலியின் ஒரு பகுதியாக **'குழந்தைகளால் திறக்கவியலாத சன்னல்கள்'** இருந்தால், சன்னலின் திறப்புப் பகுதியில் நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட அடைப்புக் கம்பிகளோ அல்லது கம்பிவலையோ இருக்கின்றனவா? | ☐ **ஆம்** | ☐ **இல்லை** - சன்னலின் திறப்புப் பகுதியை மூடும் வகையில் அடைப்புக் கம்பிகளையோ அல்லது கம்பிவலையையோ அதில் பொருத்துங்கள் (அதிகபட்ச இடைவெளி 10 சென்டி மீட்டர்). உங்களது உள்ளூர்ப் பகுதியிலுள்ள இரும்புக் கடையிலிருந்து தடுப்புக் கம்பிகளையும் கம்பிவலைகளையும் வாங்க இயலலாம், ஆனாலும் உங்களது உள்ளூர் நகரவையிலிருந்தோ அல்லது அங்கீகாரம் பெற்றுள்ள கட்டுமானப் பணியாளர் ஒருவரிடமிருந்தோ நீங்கள் இது குறித்த அறிவுரையைப் பெறல் நலம். |

## குழந்தைகளால் திறக்கவியலாத கதவுகள்

பழைய நீச்சல்குளங்களின் வேலிகள் மற்றும் தடுப்புகளின் ஒரு பகுதியாகக் கதவுகள் அமைந்திருக்கலாம். இனிமேல் புதிதாகக் கட்டப்படும் நீச்சல்குளங்களிலும், மாற்றியமைக்கப்படும் அல்லது மீண்டும் கட்டப்படும் நீச்சல்குளத் தடுப்புகளிலும் இப்படிப்பட்ட கதவுகள் அனுமதிக்கப்படுவதில்லை.

<table>
<tr><td>உங்களது நீச்சல்குளத் தடுப்புவேலியின் ஒரு பகுதியாகக் கதவு ஒன்று அமைந்திருந்தால் அது தானாகவே மூடிக் கொள்ளும் கதவா?</td><td>☐ ஆம்</td><td rowspan="4">☐ இல்லை – ‘குழந்தை-பாதுகாப்புக் கதவுகள்’ அமைக்கப்படுவதற்கு இப்போது அனுமதி கிடையாது. உங்களது நீச்சல்குளத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் தடுப்புவேலி போடுமாறு நீங்கள் கேட்கலாம். தயை செய்து உங்களது உள்ளூர் நகரவையினரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.</td></tr>
<tr><td>உங்களது நீச்சல்குளத் தடுப்புவேலியின் ஒரு பகுதியாகக் கதவு ஒன்று அமைந்திருந்தால் அதில் பொருத்தப்பட்டிருக்கும் தாழ் தரையிலிருந்து குறைந்தபட்சம் 150 சென்டி மீட்டர் உயரத்திலும், கதவின் இரண்டு பக்கங்களிலிருந்தும் இயக்கும் விதத்திலும் அமைந்துள்ளதா?</td><td>☐ ஆம்</td></tr>
<tr><td>உங்களது நீச்சல்குளத் தடுப்புவேலியின் ஒரு பகுதியாக கதவு ஒன்று அமைந்திருந்தால், தரையிலிருந்து 100 சென்டி மீட்டர் உயரம் வரைக்கும் 1 சென்டி மீட்டருக்கும் அதிகமான அகலமுள்ள கால் வைத்து ஏறுவதற்கான பிடிப்புகள் எதுவும் கதவின் மீது இல்லை என்பதை நீங்கள் உறுதிப்படுத்தியுள்ளீர்களா?</td><td>☐ ஆம்</td></tr>
<tr><td>உங்களது நீச்சல்குளத் தடுப்புவேலியின் ஒரு பகுதியாகக் கதவு ஒன்று அமைந்திருந்தால் அதில் செல்லப்பிராணிகள் நுழைவதற்கான தனியாக சிறு கதவுகள் எதுவும் இல்லை</td><td>☐ ஆம்</td></tr>
</table>

## தரைக்கும் மேலாக அமைந்துள்ள நீச்சல்குளங்கள் மற்றும் காற்றால் நிரப்பப்படக்கூடிய நீச்சல்தொட்டிகள்

<table>
<tr><td>உங்களது நீச்சல்குளம் தரைக்கும் மேலாக அமைந்திருந்தால், அதற்குத் தடுப்புவேலி போடப்பட்டுள்ளதா?</td><td>☐ ஆம்</td><td rowspan="2">☐ இல்லை – குழந்தைகளால் திறக்கப்படவியலாத தடுப்புவேலி ஒன்றை நிறுவுங்கள்.</td></tr>
<tr><td>30 சென்டி மீட்டர் ஆழத்திற்கும் அதிமாகத் தண்ணீர் நிரம்பும் காற்றால் அடைக்கப்படக்கூடிய அல்லது இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லப்படக்கூடிய நீச்சல்தொட்டி ஒன்று உங்களிடமிருந்தால் அதைச் சுற்றியும் தடுப்புவேலி போடப்பட்டிருக்கிறதா?</td><td>☐ ஆம்</td></tr>
</table>







